## ச. செ. சங்க அலுவலகம்மீது நேற்றிரவுவிமானத்தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

நேற்றிரவு ஒன்பது பதினைந்து மணியளவில் ஸ்ரீ லங்கா குண்டுவீச்சு விமானம் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் கோயில்வீதி காரியாலயத்தின் மீது குண்டுவீசியது. இந்த அலுவலகத்தின்மீது வைத்தகுறி இலக்குத்தவறியதன் காரணமாக அலுவலகம் எதுவித சேதமும் இன்றித் தப்பியது. இத்தாக்குதல் நடந்த சமயம் செஞ்சிலுவைச்சங்க கொடி அலுவலக கூரையில் பறந்தவண்ணம் இருந்தது. அதற்கு மின்ஒளியும் பாய்ச்சப் பட்டிருந்தது.

(லோ)

## பெனாசிர் பதவி நீக்கம்; காபந்து பிரதமர் எதிர்க்கட்சித் தலைவர்!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பிரதம மந்திரி பதவியிலிருந்து திருமதி பெனாசிர் பூட்டோ திடீரெனப் பதவி நீக்கம் செய்யப்பட்டதுடன் பாராளுமன்றத்தையும் ஜனாதிபதி இஷாக் கான் கலைத்துவிட்டு எதிர்க்கட்சித் தலைவரை இடைக்காலப் பிரதம மந்திரியாகக் கொண்ட காபந்து அரசாங்கத்தையும் நியமித்திருக்கிறார்.

இருபது மாத காலம் ஆட்சியிலிருந்த திருமதி பெனாசிரின் அமைச்சரவையிலிருந்து இருவர் கடந்த வாரம் விலகிக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

பிரதமரைப் பதவிநீக்கி பாராளுமன்றத்தைக் கலைத்த (4ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04

விலை ரூபா: 3-00

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ ஆடி மீ 22 ஆம் உ செவ்வாய்க்கிழமை (07 - 08 - 1990) ஹிஜ்ரி 1410 முஹறம் 15 ஓசை 170

## வவுனியாவில் "புலி வேட்டை" நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

''ஒப்பரேஷன் ரைகர்ஸ் ஹண்ட்'' என்ற ''புலி வேட்டை அழிப்பு'' நடவடிக்கையை சிறிலங்கா இராணுவம் முதற் கட்டமாக வவுனியாவில் ஆரம்பித்திருப்பதாகவும் சிறிலங்கா இராணுவத்தின் வட பகுதித் தளபதியான மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ இதற்குப் பொறுப்பாக இருப்பதாகவும் கொழும்புப் பத்திரிகை (4 ஆம் பக்கம் பார்க்க)



கடந்த சனிக்கிழமை இரவு நடந்த கோட்டைத் தாக்குதலில் வீரமரணமடைந்த புலிகளின் பூதவுடல்கள்

"பொம்மர்," "ஹெலி வட்டமிட" மறைந்த போராளிகளுக்கு

# அஞ்சலி செலுத்தத் திரண்ட மக்கள் சுவர் இடிந்து காயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாம் மீது கடந்த சனிக்கிழமை நள்ளிரவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின்போது வீரமரணமடைந்த போராளிகளுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்கு பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டபோது சுவர் இடிந்து வீழ்ந்ததில் பெண்களும் ஆண்களுமாக ஆறுபேர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டனர். கண்ணீர் மல்க மக்கள் அஞ்சலி செலுத்தியதுடன் மயானத்துக்கு பூதவுடல் பான்ட் வாத்தியத்துடனும் இராணுவ மரியாதையுடனும் எடுத்துச் செல்லப்பட்டபோது மக்கள் பூச்சொரிந்தும் பூமாலை சூட்டியும் இறுதி மரியாதை செலுத்தி வழியனுப்பி வைத்தனர்.

யாழ். குடாநாடே திரண்டு வந்திருந்ததுபோல் மானிப்பாய்ப் பகுதியில் நேற்றுக் காலை முதல் மாலைவரை மக்கள் வெள்ளம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

வயோதிபர்கள் இளைஞர்கள், யுவதிகள் சிறுவர் சிறுமிகள் என்ற வேறுபாடின்றி ஆண்களும் பெண்களும் அஞ்சலி செலுத்த நிறைந்திருந் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கிரான் துறையில் தாக்குதல்

கிரான்துறை முகாமிற்கு அருகில் இருந்த இராணுவ காவல் அரண்மீது 5ஆம்திகதி விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்ட தாக்குதலின்போது இராணுவத்தினருக்குச் சேதம் ஏற்பட்டதாக அறிவிக்கப்படு (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீர மரணம்

கிளிநொச்சியில் இராணுவம் இருந்த பகுதியில் விடுதலைப் புலிகள் கண்ணிவெடிகளை (4ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படை உதவியின்றி புலிகளை முறியடிக்க முடியாது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கோட்டை இராணுவ முகாம் மீதான தாக்குதல்களை விமானப்படையின் உதவிகொண்டே முறியடிக்கக் கூடியதாக உள்ளது என சிறிலங்கா விமானப்படையின் தளபதி தெரிவித்துள்ளார். மேலும் அவர் விமானப்படையினரின் உதவியில்லாமல் கோட்டை இரா (4ஆம் பக்கம் பார்க்க)

## இரு இராணுவம் மரணம்

(மட்டக்களப்பு)

இம்மாதம் 3 ஆம் திகதி கொம்மாந்துறை முகாமில் இருந்து எட்டு ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் சிவில் உடையில் வந்தபோது விடுதலைப்புலிகள் தாக்கியதில் இருவர் கொல்லப்பட்டனர். மிகுதி ஆறு பேரும் தப்பி ஓடி விட்டனர்.

## கிளைமோர்த் தாக்குதல்

(மட்டக்களப்பு)

புல்லுமலை முகாமில் இருந்து பொங்கல வீதியால் வந்த ஸ்ரீ லங்கா படையினர் மீது நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் கிளைமோர்த் தாக்குதல் நடத்தினர். சேத (4 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு நாள் வான் தாக்குதலில் யாழ். நகரின் பல பகுதிகள் அழிந்தன

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டுதினங்களாக ஸ்ரீலங்கா விமானங்கள் யாழ். நகரை குண்டுவீசித்தாக்கி வருகின்றன. இதில் யாழ். நகரில் எஞ்சியிருந்த பெரும் பாலான கடை, கட்டிடங்கள் அனைத்தும் சேதமுற்றுள்ளது. நகரின் முழுப்பகுதியுமே அழிந்து விட்டது எனலாம்.

ஏற்கனவே வைத்தியசாலை வீதிக்கட்டிடங்களும் நவீனசந்தையும் பஸ்நிலையமும் சேத (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல்தாக்கி இருவர் மரணம்

பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஷெல் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயிலில் உள்ள அகதியிருந்த இடங்களில் வெடித்து இருவர் மரண (4ஆம் பக்கம் பார்க்க)

## கிளீன் கட்

யாழ். மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள கிளீன் கட் நிறுவனம் தற்போது 37, சிவகுருநாதன் வீதி, பிறவுண் றோட் (இந்து மகளிர் கல்லூரிக்கும் - நீராவியடி பிள்ளையார் கோயிலுக்கும் இடையில்) இயங்குகின்றது. (B/1301)

### காணவில்லை

4-8-90 சனிக்கிழமையன்று முத்திரைச் சந்தையில் அமைந்துள்ள யாழ். இந்து சென்ஜோன்ஸ் முதலுதவிப் படை முகாமிற்கண்மையில் நிறுத்தப்பட்டிருந்த 70M679 இலக்கமுடைய றலிசைக்கிளைக் காணவில்லை இது பற்றிய தகவல் தெரிந்தவர்கள் மேற்படி முகாமில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (R-568)

# பெரும் குழிகள் தோண்டும் பீப்பாக் குண்டுகள்

(யாழ்ப்பாணம்)

பாரியவிமானம் நேற்றுமுன் தினம் அதிகாலை நடத்திய தாக்குதலில் குருநகர்ப் பகுதியில் சென்பற்றிக்ஸ் மைதானத்தில் வீழ்ந்த ஒரு குண்டினால் அந்த மைதானத்தில் பாரிய கிடங்கு ஒன்று ஏற்பட்டுள்ளது. இதே போல மிளகாய் ஜோசப் என்பவரது வீட்டிலும் பெரும் கிடங்கு ஒன்று ஏற்பட்டுள்ளது.

மேலும் சென்பற்றிக்ஸ் வீதி சந்தியில் அமைந்துள்ள சி. குலசிங்கம் என்பவரது வீட்டு முற்றத்தில் பீப்பாக் குண்டு ஒன்று வீழ்ந்து பிரிந்த நிலையில் கிடந்தது. இந்த பச்சை நிற பீப்பாவில் G. R. 79-20 என அடையாளம் இடப்பட்டு இருந்தது.

சென்பற்றிக்ஸ் பாடசாலையின் வீதி ஓர வகுப்பறைகள் முழுவதும் பலத்த சேதமடைந்திருந்ததையும் கத்தோலிக்க அச்சகத்தின் ஒருபகுதி சேதமடைந்திருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

## யாழ். இந்துவின் பழைய மாணவர்களுக்கு

தற்போதைய சூழ்நிலையில் இடம் பெயர்ந்து வந்துள்ளோருக்கு உதவி செய்வது சம்பந்தமாக ஆராய்வதற்கு எமது கல்லூரியின் பழைய மாணவர்கள் எல்லோரையும் 11-08-90 காலை 9.30 மணிக்கு கல்லூரியில் ஒன்று கூடும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சு. டிவகலாலா
செயலாளர்,
பழையமாணவர் சங்கம்.

(B/1311)

## இஞ்சிக்கு தட்டுப்பாடு

யாழ்குடா நாட்டில் இஞ்சிக்கு பலத்த தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

இதனால் ஆயுர்வேத மருந்துத் தேவைக்கென பாவிப்பதற்கு தேவையான இஞ்சியைப் பெறமுடியாது மக்கள் கஷ்டமடைந்து வருகின்றார்கள். (14)

## பெயர் மாற்றம்

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்டத்தில் சகல கிராம சேவையாளர்கள் பிரிவுகளும் பெயர் மாற்றப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள புதிதாகப் பிரிக்கப்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் ஒன்றான நல்லூர் வடக்கு கிராம சேவையாளர் பிரிவு நல்லூர் ''இராஜதானி'' கிராம சேவையாளர் பிரிவாகப் பெயர் மாற்றப் பட்டுள்ளதாக கிராம சேவை அலுவலர் திரு. ஆர். சந்திரகுமார் தெரிவித்துள்ளார். (24)

## மட்டுவிலில் பதுங்குகுழிகள்

(சாவகச்சேரி)

மட்டுவில் மகாவித்தியாலய அகதிகள்முகாமில் தங்கியுள்ள வெளிமாவட்ட அகதிகள் நலன் கருதி, அவர்களின் பாதுகாப்பிற்காக பொதுத் தொண்டர்கள் பதுங்கு குழிகளை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இப்பகுதியில் இப்பொழுது ஹெலி, பொம்மர் நோட்டமிடுவதும் ஹெலி தாக்குவதும் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்தே பதுங்கு குழிகளை பொதுத் தொண்டர்கள் அமைத்து கொடுத்துள்ளனர். (35)

## பனாட்டு உற்பத்தி

(சாவகச்சேரி)

உபஉணவுப்பெருக்கம்மூலம் தன்னிறைவைக் காணும் திட்டத்தின்கீழ் நுணாவில் கிழக்கு சிற்றூரவையினர் பனம் பனாட்டு உற்பத்தியில் மிகவும் துரிதமாக உள்ளனர். இது தனிப்பட்ட முறையிலும், கூட்டுறவு முறையிலும் உற்பத்தி மேற்கொள்ளப்படவுள்ளது.

பனை மரங்களிலிருந்து பனம் பழங்களைச் சேகரித்து கூட்டுறவு முறையில் பனாட்டை உற்பத்தி செய்வதற்கென நுணாவில் கிழக்கு சிற்றூரவையினர் 7 பேர் கொண்ட குழு ஒன்றையும் தெரிவு செய்துள்ளனர். (35)

## அகதிகளுக்கு நிவாரணம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் உள்ள அகதிமுகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு உணவுப் பொருட்கள், உடைகள்,பாய்கள் என்பவற்றை சங்கத்தானை யூப்பிற்றர் கல்வி நிலைய மாணவர்களும், ஆசிரியர்களும் வழங்கியுள்ளனர். தென்மராட்சி அகதிகள் நிவாரணக் கழகத்தினரிடம் இப் பொருட்களையும், தாம் சேகரித்த பணத்தையும் அவர்கள் கையளித்தார்கள். மேற்படி கல்வி நிலைய சமூக சேவைப் பிரிவினர் பொது இடங்களில் பதுங்குகுழிகளை அமைக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். (மு)

## நிவாரணம் புறக்கணிப்பு

(விசேட நிருபர்)

யாழ். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ள இருபத்தைந்திற்கும மேற்பட்ட குருநகர் குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்குவதற்கு சகல நிறுவனங்களும் ஓரவஞ்சகம் காட்டி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இந்து மகா வித்தியாலயத்தில் கடந்த ஒன்றரை மாதத்திற்கும் மேலாக இக்குடும்பங்கள் தஞ்சமடைந்துள்ளன. ஏனைய முகாம்களுக்குக் கிடைத்துவரும் நிவாரண உதவிகள் இங்குள்ளவர்களுக்குக் கிடைப்பதில்லையாம். (21)

## போராளிகள் வெற்றி பெற பிரார்த்தனை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்கு ஆலடி தேவாலயா நாடக மன்றத்தினர் விடுதலைப் போராட்டத்தில் வீரமரணமடைந்த போராளிகளினதும், பொது மக்களினதும் ஆத்மாக்கள் சாந்தியடையவும், களத்தில் நின்று போரிடும் வீரப் போராளிகளை காத்து அவர்களை வெற்றியடைய வேண்டுமெனப் பிரார்த்தித்தும் புங்குடுதீவு கிழக்கு பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசைகளையும் அபிஷேகங்களையும் நடாத்தி வருகின்றனர். (22)

## சாவகச்சேரியில் தகவல் நிலையம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியிலுள்ள இருபது வெளி மாவட்ட அகதிகள் முகாம்களின் பொது தகவல் நிலையமாக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி இரவுபகலாக இயங்கி வருகிறது.

தென்மராட்சி அகதிகள் நிவாரணக்கழகம் இந்த ஒழுங்கினைச் செய்துள்ளது. இது வெளி மாவட்டங்களிலிருந்து வரும் அகதிகளின் தகவல்களைப்பதிவுசெய்து கொண்டு அவ்வப்போது இடவசதி உள்ள முகாம்களுக்கு அனுப்பி வைக்கும். அத்தியாவசிய தகவல்களையும் இதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். (35)

## தீர்மானம்

(விஷேட நிருபர்)

''இலங்கையின் இன்றைய இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணவேண்டும்; அதற்குச் சிறந்த வழியாக சர்வ மதத் தலைவர்கள் சமர்ப்பித்த மகஜர் ஆதரிக்கப்பட வேண்டும். நிரந்தர தீர்வினை சாத்தியமாக்கும் சூழ்நிலைகளை ஏற்படுத்தும் பொருட்டு உடனடி யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்'' என்று யாழ். திருமறைக் கலாமன்றத்தின் நிருவாக சபைக் கூட்டம் தீர்மானம் எடுத்துள்ளது.

# நன்றி நவிலல்



## திருமதி சிற்றம்பலம் செல்லம்மா


எங்கள் குடும்பம் என்னும் கோயிலாக ஒளிவிட்ட தீபமாகவும், தெய்வமாகவும் திகழ்ந்து அறிவுரை தந்து எம்மை இருட்டினிலே தவிக்கவிட்டு நிலையிலா இன்பத்தை உதறித்தள்ளி விநாயகர் அடி சென்ற தெய்வத்தின் இறுதிக்கிரியைகளிலும் 06 - 08 - 90 திங்கட்கிழமை நடைபெற்ற அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளிலும் கலந்து எங்கள் துக்கத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கணவன், பிள்ளைகள்,
சகோதரர்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

(B-1310)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## பொன்னையா சிறிபாலசிங்கம்

விதி - 26 - 07 - 1962 சதி - 28 - 08 - 1988
திதி - 07 - 08 - 1990

மரணங்கள் ஏராளம்
புவியின் மீது - அந்த
மரணத்தில் மகிமைகள்
உண்டு - ஆனால்
உன் மரணம் அதையெண்ணும்
வேளை - எங்கள்
உடலனைத்தும் தீப்பற்றி
எரியுதையோ ! - உன்
ஆத்மா சாந்தியுற
வேண்டி - அந்த
ஆண்டவனை பிரார்த்திக்கும்

உங்கள் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர், சகோதரிகள்
அத்தான்மார், அண்ணிமார், மக்கள்
மருமக்கள், நண்பர்கள்

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

(B/1312)

### சிந்தனைக்கு

ஒரு இனத்தின் சுதந்திர வேட்கையை அழிவுகள் தடுத்து நிறுத்துவதில்லை.

- ஒரு அறிஞர்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 07-08-90

தொலைபேசி

ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208

த. பெ. எண் 05

# அதிகாரவர்க்கத்தின் எச்சம் அழிவது திண்ணம்

யாழ். கோட்டை இராணுவ முகாம் மீது கடந்த சனிக்கிழமை நள்ளிரவு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இருபத்தியேழு விடுதலைப் புலிகள் மரணத்ததைத் தழுவிக்கொண்டனர். இன்றைய நிலையில் இவர்களின் இழப்பு தமிழினத்திற்கு ஏற்பட்ட பாரிய இழப்பு என்பதில் சந்தேகமில்லை.

தமிழ் மக்கள் இது போன்ற பல இழப்புக்களைச் சந்தித்திருக்கின்றார்கள். ஆனால் இது போன்று இன்றைய நிலையில் ஒரு பெரும் இழப்பை அவர்கள் எதிர்பார்க்கவுமில்லை, சந்திக்கவுமில்லை என்றே கூற வேண்டும்.

விடுதலைப் போரில் இத்தகைய இழப்புக்கள் எதிர்பார்க்க வேண்டியதானாலும் குறைந்த ஆட்பலத்துடன் சகல வசதிகளும் கொண்ட ஓர் இராணுவத்துடன் மோதும் சிறுபான்மை இனத்திற்கு இது பேரிழப்பு ஆயினும், எதிர்பார்க்கக்கூடிய ஒன்றே

எதிரியின் குகைக்குள் செல்லும் போராளிகள் தாங்கள் பெரும்பாலும் மரணத்தைத் தழுவிக் கொள்வோம் என்ற எண்ணத்துடனேயே செல்கின்றனர். தமது உயிரை பொருட்படுத்தாமல் உயிரைப் பணயமாக வைத்து அவர்கள் மேற்கொள்ளும் இத் தாக்குதல் சம்பவங்களில் அவர்கள் வெற்றி பெறலாம், தோல்வியுறலாம். ஆனால் அவர்களின் எண்ணங்கள் தோல்வியுறுவதில்லை.

உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் இதை விடப் பெரியளவுகளில் போராளிகள் தமது இலட்சியத்திற்காக தமது இன்னுயிரை ஈந்திருக்கிறார்கள். தாக்குதலுக்குச் சென்ற போராளிகள் சில சமயங்களில் முற்றாகவே அழிக்கப்பட்ட வரலாறுகளும் உண்டு கியூபாவின் விடுதலைப் போர் ஆரம்பித்தபோது முதல் தாக்குதல் செய்யச் சென்ற குழுவில் இடம்பெற்ற எண்பத்தி இரண்டு போராளிகளில் பதினேழு போராளிகள் மட்டுமே உயிருடன் மிஞ்சி இருந்தனர். எஞ்சிய அனைவரும் அக்குழுவிற்குத் தலைமை தாங்கிய பிடல்கஸ்ரோ உட்பட சிறைப்பிடிக்கப்பட்டனர்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கண்ட சோவியத் மக்களே ஆக்கிரமிப்பாளர்களைவிட பெருமளவு உயிர்ச் சேதத்திற்கு உள்ளாயினர். இரண்டாம் உலக யுத்தத்தில் இரண்டு கோடி சோவியத் மக்கள் இறந்தார்கள்.

இவ்வாறு ஆக்கிரமிப்பாளர்களின் நடவடிக்கைகளால் அடக்கப்படும் மக்களும், அதை எதிர்த்துப் போராடும் போராளிகளும் பெருமளவில் மரணிப்பது வரலாற்றில் புதியதல்ல. ஆனால் சுதந்திரதாகம் கொண்டவர்கள் அதற்காக மனத் தளர்ச்சியோ சோர்வோ அடைவதில்லை.

இன அழிப்பில் ஈடுபட்டிருக்கும் சிறிலங்கா சிங்களப் படைகளை எதிர்த்துப் போராடி தமிழினத்தைப் பாதுகாக்கும் பெரும் பணியில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டு உள்ளனர்.

அந்நியரின் அடையாளச் சின்னமான யாழ். கோட்டை இன்று சிங்கள அதிகாரவர்க்கத்தின் ஒரு எச்சமாகவே இங்கு இருக்கின்றது. இக் கோட்டை காலத்திற்குக்காலம் எமதுமண்ணை ஆக்கிரமித்தவர்களின் பாதுகாவல் அரணாகவே இருந்து வருகின்றது.

தமிழீழ சுதந்திரப் போராட்ட ஆரம்பத்தில் இருந்து பல போராளிகள் இக் கோட்டை இராணுவ முகாமை அழித்தொழிக்கும் முயற்சியில் தமது இன்னுயிரைக் கொடுத்துள்ளார்கள்.

பல உயிர்கள் போய்விட்டது என்பதற்காக அதிகாரவர்க்கத்தின் எச்சங்களை நாம் விட்டு வைத்துவிடக் கூடாது. என்றோ ஒருநாள் அதிகாரவர்க்கத்தின் எச்சங்கள் அழிந்தே போகும். அழிக்கப்படும்.

அன்று, அவ் அதிகாரவர்க்கத்தின் எச்சத்தை அழிப்பதற்காக உயிர் நீத்த போராளிகளின் நினைவுச் சின்னங்கள் அதிலிருந்து அவர்கள் புகழ் பாட வேண்டும்.

# போர்க்காலப் பொருளாதாரக் கொள்கைகள் - ஓர் ஆய்வு (1)

## தமிழீழத்தின் தற்போதைய பொருளாதார நிலை:

கடந்த 40 ஆண்டுகளாக சிங்கள ஆட்சியாளர்கள கடைப்பிடித்த கொள்கைகளினால் தமிழீழத்தின் பொருளாதாரம் ஒரு தங்கியிருக்கும் பொருளாதாரமாக மாற்றப்பட்டது. எமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான உணவுப் பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்களைப் பெறுவதற்கும் விவசாயம், கைத்தொழில் உற்பத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான மூலப் பொருட்கள், இடைத்தரப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள், போன்றவற்றைப் பெறுவதற்கும் சிறிலங்காவில் தங்கியிருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

எமது வளங்கள் சரியான முறையில் ஆய்வு செய்யப்படவில்லை. எமது வளங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை. இதன் மூலம் படிப்படியாக தமிழீழம் சிறிலங்காவில் தங்கியிருக்கும் நிலைக்கு மாற்றப்பட்டது. தமிழீழப் பொருளாதாரத்தினை கொழும்புச் சந்தை நிர்ணயிக்கும் நிலை உருவாகியது. எமக்குத் தேவையான பொருட்களைப் பெறுவதற்கு கொழும்புச் சந்தையை நம்பியிருக்கின்றோம். அது மட்டுமன்றி கொழும்புச் சந்தையை நோக்கமாகக்கொண்டு பணப் பயிர்களை (மிளகாய் வெண்காயம், புகையிலை, முந்திரிகைப்பழம்) விவசாயிகள் அதிகளவில் உற்பத்தி செய்கின்றனர். இத்தகைய நடவடிக்கைகளினால் சிறிலங்காவின் தொங்குதசையாக தமிழீழம் மாற்றப்பட்டுவிட்டது. இதன் மூலம் தமிழீழத்திற்கென ஒரு தனியான பொருளாதாரம் கிடையாது என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

ஒரு இனம் தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டுமாயின் அதற்கு இருக்கவேண்டிய பண்புகளில் ஒன்று அவ் இனத்திற்கென ஒரு தனியான பொருளாதாரம் இருத்தல் என்பதாகும். தமிழினத்தின் தேசியத் தன்மையை அழிப்பதற்காக எமது மொழி. பிரதேசம், கல்வி, கலாசாரம் என்பவற்றைப் படிப்படியாகப் பறித்த சிங்கள ஆட்சியாளர்கள் எமது பொருளாதாரத்தினையும் படிப்படியாச் சீரழித்தனர். நாம் எமது மொழி, பிரதேசம், கல்வி போன்றவற்றைப் பாதுகாக்க கடந்த காலங்களில் முற்பட்டோமேயொழிய எமக்கென தனியான ஒரு பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பத் தவறிவிட்டோம்.

உண்மையில் தமிழீழத்தின் பொருளாதாரம் ஒரு தங்கியிருக்கும் பொருளாதாரம் அல்ல. எமது வளங்கள் முழுமையாகவும் பொருத்தமான முறையிலும் பயன்படுத்தப்படுமேயானால் எமது தேவைகள் பெரும்பாலானவற்றை நாமே பூர்த்தி செய்து கொள்ளக் கூடியதாகவிருக்கும் உதாரணமாக தமிழீழ மக்களின் வருடாந்த அரிசித் தேவை ஏறத்தாழ 246636 மெற்றிக் தொன்களாகும். தமிழீழத்தின் வருடாந்த மொத்த அரிசி உற்பத்தி ஏறத்தாழ 399520 மெற்றிக் தொன்களாகும். எனவே தமிழீழக்கின் அரிசி உற்பத்தி தமிழீழத்தின் தேவைக்கும் மேலாகவே உள்ளது வெளிப்படை. ஆனால் நடைமுறையில் எமது அரிசித் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு கொழும்பிலிருந்து லொம்களையும் கப்பல்களையுறி எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சிங்கள அரசாங்கமே தமிழீழ மக்களுக்கு உணவு வழங்குகின்றார்கள் என்றதோர் போலியான தோற்றத்தினை உருவாக்கியுள்ளனர். இதனடிப்படையிலேயே தமிழீழ மக்களின் மீது பொருளாதாரத்தடைகளை விதிப்பதன் மூலம் தமிழீழத்திற்கென ஒரு தனியான பொருளாதாரம் கிடையாது என்ற கருத்தினை இலங்கைக்குள்ளேயும் இலங்கைக்கு வெளியேயும் சிங்கள ஆட்சியாளர்கள் வலியுறுத்திவருகின்றனர். எனவே இத்தகைய மாயைத் தோற்றங்களையும், போலியான தடைகளையும் உடைத்தெறிந்து தமிழீழத்திற்கென ஒருதனியான பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும்.

தமிழீழ ஆய்வு நிறுவனம்

# குவைத்தின் இடைக்கால அரசை ஐரோப்பிய நாடுகள் ஏற்காது

### - அமெரிக்கா அறிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக் ஆதரவு பெற்ற குவைத்தின் இடைக்கால அரசை எமது ஐரோப்பிய நேசநாடுகள் ஏற்றுக்கொள்ள மாட்டாது என்று அமெரிக்கா அறிவித்துள்ளதுடன் முன்னாள் தலைவர் அமீரிடம் மீண்டும் குவைத்தின் ஆட்சியை ஒப்படைக்க ஈராக் முன்வர வேண்டும் என்று சவூதி அரேபியாவின் அரபுலீக் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குவைத்தில் நிலைகொண்டுள்ள தமது படையை அகற்றுவதில் முதல் கட்டப் பணியை முடித்துவிட்டதாக ஈராக் அறிவித்துள்ள போதும், அப்படி குவைத்திலிருந்து தமது படையை ஈராக் அகற்றியுள்ளதற்கான அறிகுறியேதும் தென்படவில்லை என்று அமெரிக்க தரப்பில் குற்றம் தெரிவிக்சப்பட்டுள்ளது.

ஈராக்கிற்கு எதிராக பொருளாதார தடையை விதிப்பது குறித்தஅமெரிக்காவின் யோசனையை விவாதிக்கும் வகையில் நேற்று ஐ.நா.வின் பந்தோபஸ்து சபையும் கட்டப்பட்டது.

இதற்கிடையில் வளைகுடா நிலைமை குறித்து அறிவதற்காக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. டிக் ஜெனி சவூதி அரேபியா செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# மீனவர்கள் கைது குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கவும்

### - மு. கருணாநிதி

(சென்னை)

''கச்சதீவு பகுதியில் வைத்து சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் பற்றிய விடயத்தில் வெளியுறவு அமைச்சும், கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகமும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்'' என்று தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி இந்திய மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறிலங்கா கடற்படையினால் இந்திய மீனவர்கள் எட்டுப் பேர் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டதுடன் இதுவரை அவர்கள் பற்றிய விபரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இது தொடர்பாக முதல்வர், வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ராலுக்கு அனுப்பி வைத்துள்ள விசேட டெலக்ஸ் செய்தி ஒன்றிலேயே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

மேற்படி மீனவர்கள் இராமேஸ்வரம் பகுதியில் வைத்தே சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாகவும் முதல்வர் அந்த டெலக்ஸ் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# ஹிரோஷிமா நினைவுநாள்

(டோக்கியோ)

இரண்டாவது உலக யுத்தத்தின்போது ஹிட்லரின் குண்டு வீச்சுக்கு இலக்கான ஹிரோஷிமாவின் நாற்பத்தைந்தாவது ஆண்டு நினைவுநாள் நேற்றாகும். இந்தக் குண்டுவீச்சினால்ஒரு லட்சத்துநாற்பதாயிரம் பேர் கொல்லப்பட்டதுடன், அவ்வேளையில் ஏற்பட்ட கதிர்வீச்சால் மேலும் பலர்நோயாளிகளாகி உள்ளதும், தொடர்ந்து இறந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

# 'அஞ்சலி மட்டும் போதாது; அந்நியரை விரட்ட மக்கள்பங்காளிகளாகட்டும்'

-யோகி

தமிழீழத்தில் ஆண்டாண்டு காலமாக நிலவி வந்த அந்நிய ஆதிக்கம் ஒழிக்கப்பட வேண்டும். இந்த மண்ணிலிருந்து அந்நிய சக்திகளை விரட்டி அடிக்க வேண்டும். இந்த மண்ணில் சுதந்திரக் காற்று வீசவேண்டும். எமது மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்க வேண்டும். எமது போராட்டத்தில் மில்லர், திலீபன் போன்ற தியாகிகள் உட்பட ஆயிரக்கணக்கான போராளிகளை இழந்துள்ளோம். எமது இலட்சியம் நிச்சயம் விரைவில் வெற்றி பெறும். ஆதலால் எமது மக்கள் மரணித்த போராளிகளுக்காக கண்ணீர் சிந்தி அஞ்சலி செலுத்தினால் மட்டும் போதாது. ஒவ்வொருவரும் பங்காளிகளாக வேண்டும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலதிபர் திரு. யோகரத்தினம் யோகி யாழ் கோட்டை முகாம் தாக்குதலின்போது மரணித்த போராளிகளின் இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் மேற் குறிப்பிட்ட வேண்டுகோளை விடுத்தார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நேற்று இந்த அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

திரு. யோகரத்தினம்யோகி தொடர்ந்து பேசுகையில், போராளிகள் எமது மக்களைப் பாதுகாக்க 24 மணித்தியாலமும் ஆயுதங்களோடு உலாவித் திரிகிறார்கள். அந்நிய ஆதிக்கத்திலிருந்து எமது மக்கள் விடுதலை பெறவேண்டுமென்பதற்காகத் தான் ஆயுதம் ஏந்திப் போராடுகின்றோம் என்றார்.

எமது தாயகமான தமிழீழம் ஒருதனி அரசைஅமைப்பதற்கு சகல வளங்களும் கொண்டிருக்கிறது. ஆதலால் எதற்கும் அந்நியரிடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்படாது. கடற்றொழிலுக்கு கடல்வளமும், விவசாய உற்பத்திக்கு மண் வளமும் மிக்கது என்று குறிப்பிட்ட திரு. யோகி, எமது இலட்சியப் போராட்டம் வரலாற்று முக்கியத்துவமாகிறது என்று முழு உலகமுமே பாராட்டியுள்ளது என்று சொன்னார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. தேவன் பேசுகையில், இன்று கூடியிருக்கும் பல்லாயிரக் கணக்கான மக்களும் ஆயுதம் தூக்கிப் போராடினால், விரைவில் விடுதலை பெறுவோம் என்றார்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிச் செயலாளர் செல்வி சுந்தரி பேசுகையில், தியாகி திலீபன் கூறியதுபோல யாழ், கோட்டையில் புலிக் கொடி பறக்கத்தான் போகிறது என்று உறுதி அளித்தார்.

திரு. ஆஞ்சநேயர் பேசுகையில், எமது போராட்டத்தில் முக்கால் பங்கு படிக்கல்லைத் தாண்டி விட்டோம் என்றும், மக்களும் எழுச்சி கொண்டு எங்களுடன் பங்களிக்க வேண்டும் என்றும் சொன்னார்.

## வவுனியாவில் . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யொன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

வவுனியாவில் ''புலிவேட்டை அழிப்பு'' நடவடிக்கை வெற்றியளித்திருப்பதாகவும் பதினேழு பேர் நேற்று முன்தினம் கொல்லப்பட்டதாகவும் அதே செய்தி தெரிவித்தது.

1987 ஆம் ஆண்டில் தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலியின் வடமராட்சி லிபரேஷன் ஒப்பரேஷன் தாக்குதலுக்கும் மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ பொறுப்பாக இருந்தார் என்றும் அந்தச் செய்தி தெரிவித்தது.

## பெனாசிர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி பாராளுமன்றத்துக்குப் புதிய தேர்தல் ஒக்டோபர்மாதம் இருபத்திநான்காம் தேதி நடைபெறுமென்றும் அறிவித்திருக்கிறார்.

பெனாசிர்பூட்டோவின் அரசாங்கம் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததாகவும், தமக்குதேவையானவர்களுக்கு பதவிகளை வழங்கியதாகவும், ஊழலில் ஈடுபட்டதாகவும், மக்களின் நம்பிக்கை இழந்துவிட்டதாகவும் காரணம் காட்டியே பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

## விமானப்படை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணுவமுகாமை விடுதலைப் புலிகளிடம் இருந்து பாதுகாக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

## வீரமரணம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அகற்றும்போது தற்செயலாக வெடித்ததால் பாலன் (உமையாள்புரம்) என்ற போராளி காயமடைந்து ஆஸ்பத்திரிக்கு செல்லும்போது வீர மரணமடைந்ததாக விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கிளைமோர்

விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

இங்கு இடம் பெற்ற வேறொரு கண்ணிவெடிச் சம்பவத்தால் படையினரில் ஒருவர் காலை இழந்ததுடன் அருகில் இருந்த வீடு ஒன்றும் எரிக்கப்பட்டது.

## கிரான்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

இந்த முகாமில் இருந்து அதேதினம் தண்ணீர் எடுக்க வந்த படையினர் மீதும் புலிகள் தாக்குதல்கள் நடத்தினர். சேதவிபரம் பற்றித் தெரியவில்லை.

## பத்திரிகையாளர் மாநாடு

(நல்லூர்)

பயணிகள் போக்குவரத்து தொடர்பான சில புதிய நடைமுறைகள் பற்றி அதன் பொறுப்பாளர் சலீம் இன்று காலை பத்து மணியளவில் பயணிகள் போக்குவரத்து சபை முத்திரைச்சந்தை அலுவலகத்தில் பத்திரிகையாளர்களை சந்தித்து விளக்கவுள்ளார். (லோ)

## திருடர் கைவரிசை

விமானக் குண்டு வீச்சுக்களால் கடைகள், வீடுகளின் கதவுகள் உடைபட்டு திறந்து இருக்கும் குருநகர் பகுதிகளில் திருடர்கள் பெறுமதி வாய்ந்த பொருட்களைக் கையாடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடை, வீடுகளின் சொந்தக்காரர்கள் அகதிகளாகத் தூர இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றிருப்பதால் உடனடியாகப் பொருட்களை பாதுகாத்துக்கொள்ள முடிவதில்லை, (21)

## அஞ்சலி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனர்.

மானிப்பாய் நகரமெங்கும் விடுதலைப் புலிகளின் கொடியும், கறுப்புக் கொடிகளும் தொங்க விடப்பட்டிருந்தன.

காலை 10 மணிக்கே மக்கள் கூட்டம் கூட்டமாக வரத் தொடங்கிய போதிலும் நண்பகல் ஒரு மணியளவில் மரணித்த போராளிகளின் புகழுடம்புகள் தாங்கிய பேழைகள், இந்துக் கல்லூரி மண்டபத்துக்கு வந்து சேர்ந்தன.

விடுதலைப்புலிகள் சின்னம் பொறிக்கப்பட்ட கொடிச் சீலைகளால் புகழுடம்புகள் மூடப்பட்டிருந்தன.

இச் சமயத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா), செயலதிபர் திரு. யோகரத்தினம் யோகி உட்பட பல முக்கியஸ்தர்களும் வந்து அஞ்சலி செலுத்தினர்.

மக்கள் நீண்ட கியூவில் அஞ்சலி செலுத்திக்கொண்டிருந்த சமயம் வானத்தில்'பொம்மர்' சுற்றி வட்டமிட்டது. இருந்தும் மக்கள் பீதியடையவில்லை. ஐந்து மணியளவில் ஆயுதந்தாங்கிய விடுதலைப் புலிகளின் ஆண், பெண் போராளிகள் அணிவகுத்து நிற்க, பான்ட்வாத்தியம் இசைக்க புகழுடம்புகளைத் தாங்கிய ஊர்திகள்அமைதியாகஊர்ந்து சென்றன மானிப்பாய் பிப்பிலி மயானத்தை நோக்கி.

மயானத்தை ஊர்திகள் சென்றடைந்ததும், போராளிகளின் புகழுடம்புகளுக்கு தாய்-தந்தையர், உறவினர்களால் இந்துசமயா சாரப்படி அந்திமக்கிரியைகள் நடாத்தப்பட்டன.

விடுதலைப்புலிகள் இறுதி மரியாதை வேட்டுகளைத் தீர்த்தனர். (மா)

## இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல்

(இராமேஸ்வரம்)

தமிழ் நாட்டின் மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் தொடர்ந்தும் தாக்குதல்கள் நடாத்திவருவதாகதமிழக அரசுக்குப் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

நேற்று இராமேஸ்வரத்தில் இருந்து கச்சதீவுப்பகுதிக்கு மீன்பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்களை ஸ்ரீலங்கா கடற்படையினர் கம்பிகளால் அடித்துத்தாக்கி பிடித்த மீன்கள், வலைகள் என்பனவற்றைப் பறித்துச்சென்றதாக அம்மீனவர்கள் புகார் செய்துள்ளனர்.

இவர்களில் இரு மீனவர்கள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இருபடகுகளில்சென்றஎட்டு தமிழக மீனவர்களைஸ்ரீலங்கா கடற்படையினர் பிடித்துச் சென்றதாக அறிவிக்கப்படுகிறது.

இராமேஸ்வரம் பகுதியில் கடலில் வந்த இலங்கை அகதிகளை இவர்கள் அழைத்து வந்தபோது கடற்படையினர் பிடித்துச்சென்றதாகக் கூறப்படுகிறது

## தமிழ் நாட்டில் அதிக கண்காணிப்பு அவசியம்

(டில்லி)

''இலங்கையின் அண்மைக் கால நிலைமைகளை கவனத்தில் கொண்டு தமிழ் நாட்டில் அதிக கண்காணிப்புக்கள் அவசியமானதாகும்'' என்று இந்தியப் பிரதமர் வி. பி. சிங் தெரிவித்துள்ளார்

டில்லியில் நடைபெற்றஜனதாதள் பாராளுமன்ற அங்கத்தவர்கள் அடங்கிய கூட்டத்திலேயே திரு. சிங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## ஷெல் தாக்கி வீடு சேதம்

(யாழ்ப்பாணம்)

பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று நேற்று பிறவுண் வீதியில் உள்ள வீடொன்றில் விழுந்து வெடித்து வீடு சேதமாகியது.

முன்னாள் ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர் ரி. லோகநாதபிள்ளையின் வீடே இத் தாக்குதலுக்கு உள்ளாகியது.

## இரண்டுநாள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முற்று விட்டது. கடந்த சனிக்கிழமை நள்ளிரவுத்தாக்குதலுடன் மின்சார நிலைய வீதி கடைப்பகுதி முழுமையாக அழிந்து விட்டது. நகரின் மத்தியில் நின்று பார்க்கும் போது மயானத்தில் நிற்பது போன்ற பிரமை உண்டாவது குறிப்பிடத்தக்கதாகும்.

சனிக்கிழமைத் தாக்குதலில் லங்கம் மருந்துக்கடை, அசோகாபோட்டோ, ஜெமினி ஸ்ரூடியோ, பெற்றாஏஜென்ஸி மங்களம் ஸ்ரோஸ், உப்புக் கடை, சாமி அன்கோ, பாதுகாதேவி ஓட்டுக்கடை என்பன சேதமடைந்தன. இக்கடைகளின் பின்னால் உள்ள சிலவீடுகளும் சேதத்திற்குள்ளாகி உள்ளன.

### நேற்றைய தாக்குதல்

இரவு ஒன்பது பதினைந்து மணியளவில் குண்டுவீச்சுவிமானங்கள் யாழ்நகரில் கண் மண் தெரியாது தாக்கிக் கொண்டிருந்தன. நேற்று அதிகாலை நகரில் பெய்த பெருமழையால் பதுங்கு குழிகள் சேறும் சகதியுமாக ஆகிவிட்டது. இதனால் மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் பதுங்கு குழிகளில் பதுங்கிக் கொண்டனர். (லோ)

## இந்திய பாராளுமன்றில் இல. தமிழர்...

இந்திய பாராளுமன்றம் இன்று கூடும் பருவகாலக் கூட்டத் தொடரில்இலங்கைத்தமிழரின் பிரச்சினை விவாதிக்கப் படவுள்ளது.

நேற்று நடைபெற்ற ஜனதாதள் கூட்டத்தில் இதுகுறித்து தெரிவிக்கப்பட்டது.

தமிழர்பிரச்சினையில்இலங்கையிலுள்ளதமிழர்களின்பாதுகாப்பு அகதிகளாக இந்தியா வரும் தமிழர் சம்பந்தமான பிரச்சினை, 1987 இலங்கை இந்திய ஒப்பந்தம் என்பன தொடர்பாக பிரச்சினைகள் விவாதிக்கப்படும் எனத் தெரிகின்றது.

## துணுக்காயில் விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

துணுக்காயில் இருந்த ஜீ.பி.எஸ் கட்டிடத்தின்மீது நேற்றுக் காலை விமானத்தாக்குதல் நடாத்தப்பட்டதால் அக்கட்டிடம் சேதமடைந்தது.

## ஷெல் தாக்கி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மானார்கள்.

திருமதி வேலாயுதபிள்ளை நேசம்மா (வயது 53) இராசையாசரவணமுத்து(வயது33) ஆகியோரேமரணமானவர்கள் ஆவர். மேலும் 25பேர் காயமடைந்துள்ளனர். அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள்.

இதேவேளை தேவஸ்தானத்திற்கோ அல்லது வீதியில் உள்ள மடங்களுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லைஎன தேவஸ்தான தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தெரிவித்தார்.


## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

### நிர்வாக சபைக் கூட்டம்

இடம்: யூனிவேர்சல், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
காலம்: 07 - 08 - 90 (செவ்வாய்) காலை 10 மணி

நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

### பொதுச் சபைக் கூட்டம்

இடம்; யாழ் - நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலை (யாழ் கல்வித் திணைக்களத்திற்கு அருகாமையில்)
காலம்: 9 - 8 - 90 (வியாழன்) காலை 10 மணி

பொதுச் சபை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

–செயலாளர்

(B 1309)



## முக்கிய அறிவித்தல்

அனைத்துப் பாடசாலைகளையும் சேர்ந்த விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தின் உறுப்பினர்களும் எதிர்வரும் 9ஆம் திகதி (வியாழக்கிழமை) காலை 10 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு தவறாது சமுகமளிக்கும்படி கேட்கப்படுகின்றீர்கள்.

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் (SOLT)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.